பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
17 11 2024 **SUNDAY** **7.15 PM**
ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நைஜீரியா நாட்டுடனான நட்புறவுக்கு இந்தியா உயர் முன்னுரிமை அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- பருவநிலை மாற்றத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் வளர்ந்த நாடுகளின் செயல்பாடுகள் கவலை அளிப்பதாக உள்ளது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

- கடலோர காவல்படையின் செயல்பாடுகளுக்கு பாதுகாப்பிற்கான நாடாளுமன்ற நிலைக்குழு பாராட்டு தெரிவித்துள்ளது.

- தமிழகத்தில் காலியாக உள்ள மருத்துவ பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.

- ஆசிய சாம்பியன் கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>*-- இனி விரிவான செய்திகள் ----*</u>

**<<<<<<>>>>>**

நைஜீரியா நாட்டுடனான நட்புறவுக்கு இந்தியா உயர் முன்னுரிமை அளிப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அரசுமுறைப் பயணமாக நைஜீரியா சென்றுள்ள அவர், இன்று அந்நாட்டு அதிபர் திரு. Bola Ahmed Tinubu-ஐ சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அப்போது, பயங்கரவாதம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற சவாலான பிரச்சினைகளை இருநாடுகளும் இணைந்து எதிர்கொள்வதென முடிவு செய்யப்பட்டதாக பிரதமர் தெரிவித்தார்.

பாதுகாப்பு, எரிசக்தி, தொழில்நுட்பம், சுகாதாரம், கல்வி மற்றும் கலாச்சாரம் ஆகிய துறைகளில் இருநாடுகளுக்கும் இடையே ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

முன்னதாக, அந்நாட்டு அதிபர் அளித்த சிறப்பான வரவேற்புக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துக்கொண்டார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அந்நாட்டு மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் 20 டன் நிவாரணப் பொருட்களை இந்தியா அனுப்பிவைத்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

பிரிக்ஸ் அமைப்பில் உறுப்பினராக நைஜீரியா இணைய உள்ளதற்கு பிரதமர் வாழ்த்து தெரிவித்தார்.

அங்குள்ள இந்திய வம்சாவளியினரிடையே பிரதமர் கலந்துரையாட உள்ளார்.

தனது பயணத்தின் இரண்டாவது கட்டமாக பிரேசில் நாட்டுக்கு செல்லும் அவர், அங்கு நடைபெறவுள்ள ஜி-20 உச்சிமாநாட்டில் பங்கேற்கிறார்.

இம்மாநாட்டில் பல்வேறு உலகளாவிய பிரச்சினைகளில் இந்தியாவின் நிலை குறித்து விரிவாக எடுத்துரைக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தமது பயணத்தின் மூன்றாம் கட்டமாக பிரதமர் திரு நரேந்திர மோடி நாளை மறுநாள் கயானா செல்கிறார்.

<<<<<<>>>>>

பருவநிலை மாற்றத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் வளர்ந்த நாடுகளின் செயல்பாடுகள் கவலை அளிப்பதாக உள்ளது என்று இந்தியா தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, வளரும் நாடுகளில் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதில் எவ்வித முன்னேற்றமும் இல்லை என்று இந்தியா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பருவநிலை மாற்றம் காரணமாக வளரும் நாடுகள் பாதிப்புகளை எதிர்கொள்வதாகவும், அதற்கு தீர்வுகாணும் திறன் குறைவாக உள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>

சென்னையில் நடைபெற்றுவரும் பாதுகாப்பிற்கான நாடாளுமன்ற நிலைக்குழு கூட்டத்தில், கடலோர காவல்படையின் செயல்பாடுகள் குறித்து இன்று ஆலோசிக்கப்பட்டது.

திரு ராதாமோகன் சிங் தலைமையிலான இக்குழுவின் ஆய்வுக்கூட்டத்தில், கடலோர பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் மற்றும் இந்திய கடல் எல்லைகள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதில், பாதுகாப்புத்துறை மற்றும் கடலோர காவல்படையை சேர்ந்த உயரதிகாரிகள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில், கடலோர காவல் படையின் செயல் திறன், உத்திசார் நடவடிக்கைகள் மற்றும் தயார் நிலை குறித்து அதன் தலைமை இயக்குனர் திரு பரமேஷ் விரிவாக எடுத்துரைத்தார்.

கடலோர காவல்படையின் திறமையான செயல்பாடுகளுக்கு நாடாளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

<<<<<<>>>>>

டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் இந்தியா உலக அளவில் மூன்றாவது இடத்தில் உள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்டம் வேலப்பன்சாவடியில் உள்ள தனியார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய அவர், சுயசார்பு இந்தியாவின் இலக்கை அடையும் வகையில் மத்திய அரசு தொடர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

தொழில் வளர்ச்சி மற்றும் ஆராய்ச்சி பணிகளுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக அவர் கூறினார்.

ஏற்றுமதியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

மாவட்டந்தோறும் மருத்துவக்கல்லூரிகள் தொடங்கப்பட்டு வருவதாகவும், கடந்த பத்தாண்டுகளில் எய்ம்ஸ் மருத்துவமனைகளின் எண்ணிக்கை 23-ஆக அதிகரித்துள்ளது என்றும் திரு எல். முருகன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ஜவுளி உற்பத்தியில் தமிழகம் நாட்டிலேயே முன்னணி மாநிலமாக திகழ்கிறது என்று அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

சென்னையை அடுத்த தரமணியில் அமைந்துள்ள தேசிய ஆடை வடிவமைப்பு கல்வி நிறுவனத்தில் ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடையே பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

இந்த கல்வி நிறுவனம் திறமையான மாணவர்களை உருவாக்குவதில் முன்னோடியாக உள்ளது என்று அவர் கூறினார்.

ஜவுளி மற்றும் ஆடை வடிவமைப்பை ஊக்குவிக்கும் வகையில், ‘Vision Next ’ எனும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஜவுளி உற்பத்தியின் சந்தை மதிப்பு வரும் 2030-ஆம் ஆண்டில் 350 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

விருதுநகரில் ஜவுளிபூங்கா தொடங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாக அவர் தெரிவித்தார்.

வரும் 2030-ஆம் ஆண்டிற்குள் ஜவுளித்துறையில் உள்ள வேலைவாய்ப்புகள் 6 கோடியாக உயரும் என்று அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் காலியாக உள்ள மருத்துவப்பணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

நெல்லையில் ஒரு கோடிய 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள புதிய மருத்துவ கட்டிடங்கள் மற்றும் மருத்துவப்பிரிவுகளை இன்று அவர் திறந்துவைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மருத்துவமனைகளில் காலியாக உள்ள 2 ஆயிரத்து 553 பணியிடங்களுக்கு அடுத்த ஆண்டு ஜனவரி 27-ஆம் தேதி தேர்வு நடத்தப்பட்டு, 100 சதவீதம் காலிப்பணியிடங்கள் நிரப்பப்படும் என்று தெரிவித்தார்.

இந்த தேர்வுகளை ஆன்லைன் மூலம் நடத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

மாநிலத்தில் முதல் முறையாக நெல்லை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பெண் மருத்துவர் மற்றும் பணியாளர்களுக்கான ஐந்து ஓய்வறைகள் கொண்ட இளஞ்சிவப்பு மையம் தொடங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>>

ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவை இரண்டாவது கட்டத் தேர்தலுக்கான பிரச்சாரம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில், பல்வேறு அரசியல் கட்சிகள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளன.

பொக்காரோ மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, திரு ஹேமந்த் சோரன் தலைமையிலான அரசு ஊழல் மற்றும் தவறான கொள்கைகளை பின்பற்றி வருவதாக குற்றம் சாட்டினார்.

தும்காவில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அம்மாநில முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன், முக்கிய பிரச்சினைகளிலிருந்து பிஜேபி மக்களை திசை திருப்பும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக குறை கூறினார்.

இதனிடையே, சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் நாளை மாலையுடன் நிறைவடைகிறது.

இந்நிலையில், அனைத்து அரசியல் கட்சிகளும் வாக்கு சேகரிப்புக்கான குறுஞ்செய்தி அனுப்புவதை நிறுத்த வேண்டும் என்றும், அதனை மாவட்ட நிர்வாகம் கண்காணிக்க வேண்டும் என்றும் அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி திரு கே ரவிகுமார் அறிவுறுத்தியுள்ளார்.

மகாராஷ்ட்ரா மாநில சட்டப்பேரவைக்கான தேர்தல் வரும் 20-ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது.

மொத்தம் 288 தொகுதிகளை கொண்ட அம்மாநில சட்டப்பேரவைக்கு, நான்காயிரத்து 136 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இதில், 3 ஆயிரத்து 771 ஆண் வேட்பாளர்களும், 363 பெண் வேட்பாளர்களும் போட்டியிடுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே, மகாராஷ்ட்ரா மாநிலம் ‘Satana’-வில் நடைபெற்ற தேர்தல் பேரணியில் பங்கேற்று பேசிய பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரும், மத்திய அமைச்சருமான திரு நிதின்கட்கரி, கிராமங்கள், விளிம்பு நிலையில் உள்ள மக்கள், தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் நலனுக்காக பல்வேறு புதிய திட்டங்களை மாநில அரசு அமல்படுத்தியுள்ளதாக கூறினார்.

நாக்பூரில் நடைபெற்ற சாலை பேரணியில் அம்மாநில துணை முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் கலந்துகொண்டார்.

சோலாப்பூரில் தேசியவாத காங்கிரஸ் கட்சி சரத்பவார் பிரிவு சார்பில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பேரணியில் பங்கேற்று பேசிய திரு சரத்பவார், அம்மாநில மக்கள் எதிர்கொண்டுவரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண எதிர்க்கட்சி கூட்டணிக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இதனிடையே, நாக்பூரில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான், பிஜேபி கூட்டணிக்கு மக்கள் ஆதரவு அளிப்பார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<>>>>>

ஆம் ஆத்மி கட்சி தலைவர்களில் ஒருவரும், தில்லி அமைச்சருமான திரு கைலேஷ் கெலாட் தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

அவர் தமது ராஜினாமா கடிதத்தை, அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளரான திரு அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு அனுப்பியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஆம் ஆத்மி கட்சி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இருந்து விலகி செல்வதால், தாம் இந்த முடிவை மேற்கொண்டதாக திரு கைலேஷ் கெலாட் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

மும்பையில் உள்ள ரிசர்வ் வங்கி அலுவலகத்தின் நுகர்வோர் சேவை மையத்திற்கு லஷ்கர் இ தொய்பா தீவிரவாத அமைப்பிடமிருந்து வெடிகுண்டு மிரட்டல் வந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதுதொடர்பாக, ரிசர்வ் வங்கி சார்பில் மும்பை காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்று வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய சாம்பியன் கோப்பை மகளிர் ஹாக்கி போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

பீஹாரின் Rajgir-ல் இன்று நடைபெற்ற இப்போட்டியில், இந்தியா 3-0 என்ற கோல் கணக்கில் ஜப்பானை வென்றது.

<<<<<<END>>>>>